## ஒன்றிய அரசின் ரத்துக்கு நம்முடைய அழுத்தமே அடிப்படைக் காரணம்!

# டங்ஸ்டன் ரத்து: இது அனைவருக்குமான வெற்றி!

### அரிட்டாபட்டி நன்றியறிவிப்புக் கூட்டத்தில்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரை!






டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏல உரிமையை இரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி, திட்டத்தை இரத்து செய்ய உறுதியான நடவடிக்கை எடுத்தமைக்காக மதுரை மாவட்டம், வல்லாளப்பட்டி கிராம மக்கள் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (26.1.2025) நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில், முதலமைச்சர் அவர்கள் அக்கிராம மக்களிடையே ஏற்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எம்.எஸ். சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரை, ஜன.28-

**“டங்ஸ்டன் சுரங்க ரத்துக்கு நம்முடைய அழுத்தமே அடிப்படைக் காரணம்” என்றும் “இது அனைவருக்குமான வெற்றி” என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்டம் அரிட்டாபட்டியில் மக்கள் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்து உரையாற்றும் போது கூறினார்.**

டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏல உரிமையை ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை மாவட்டம், அரிட்டாபட்டி, வல்லாளப்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

மதுரை மாவட்டம், அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமையவுள்ளதாகவும், அதற்கான ஏல உரிமை ‘இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட்’ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய அரசு அறிவித்தது. அதற்கு தமிழ்நாடு அரசும், அப்பகுதி கிராம மக்களும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். “இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால் பல்லுயிர்ப் பெருக்க பாரம்பரியத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ள அரிட்டாபட்டி பாதிக்கப்படும்” என்று, மதுரை மாவட்டத்தில் பல்வேறு அமைப்பினரும் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

### சட்டப்பேரவையில் முதல்வர் தெரிவித்த உறுதியான கருத்து!

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 9.12.2024 அன்று - மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், நாயக்கர்பட்டி கிராமத்தில் ‘இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட்’ நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை உடனடியாக ரத்து செய்திடவும், மாநில அரசுகளின் அனுமதியின்றி எந்தச் சுரங்க உரிமத்தையும் வழங்கக் கூடாது என்றும் ஒன்றிய அரசை வலியுறுத்தி ‘அரசினர் தனித் தீர்மானம்’ கொண்டுவரப்பட்டது.

இந்தத் தனித் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது, முதலமைச்சர் அவர்கள், “எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழ்நாட்டிற்குள் ஒன்றிய அரசால் போடப்படக்கூடிய இந்தத் திட்டம், நிச்சயம் வரக்கூடிய வாய்ப்பு இருக்காது, அதைத் தடுத்து நிறுத்துவோம். அப்படி ஒரு சூழல் வந்தால் முதலமைச்சர் பொறுப்பில் இருக்க மாட்டேன்” என்று தெரிவித்தார்.

### அரசினர் தீர்மானம்! ஒன்றிய அரசு பணிந்தது!

டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு எதிராக சட்டப்பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஒன்றிய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மக்களின் உணர்வுக்கும், மாநில அரசின் உறுதிக்கும் ஒன்றிய அரசு பணிந்து, டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை ரத்து செய்து அறிவிப்பு வெளியிட்டது.

### முதல்வரைச் சந்தித்து மக்கள் நன்றி!

டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏல உரிமையை ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு இத்திட்டம் ரத்து செய்யப்படக் காரணமாக இருந்த முதலமைச்சர் அவர்களை 25.1.2025 அன்று தலைமைச் செயலகத்தில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் - அரிட்டாபட்டி, வல்லாளப்பட்டி, கிடாரிப்பட்டி, நரசிங்கம்பட்டி, நாயக்கர்பட்டி, செட்டியார்பட்டி, தெற்கு தெரு, மீனாட்சிபுரம், மாங்குளம் உள்ளிட்ட பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள் சந்தித்து, தங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

முதல்வர் அவர்கள் நேற்று முன்தினம் (26.1.2025) குடியரசு நாள் விழா முடிவுற்ற பின்னர் சென்னையிருந்து மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றார். மதுரையிலிருந்து அரிட்டாபட்டிக்குச் சென்ற முதலமைச்சர் அவர்களுக்கு வழி நெடுகிலும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்ட முதலமைச்சர் அவர்கள், தன்னை வரவேற்கக் காத்திருந்த பொதுமக்களில் தம்பதியர் ஒருவரின் ஆண் குழந்தைக்கு “வெற்றி” என்றும், மற்றொரு தம்பதியரின் பெண் குழந்தைக்கு “திராவிடச் செல்வி” என்றும் பெயர் சூட்டினார்.

முதன்முறையாக அரிட்டாபட்டி கிராமத்திற்குச் சென்ற முதலமைச்சர் அவர்களுக்கு அக்கிராம முக்கியப் பிரமுகர்கள் பொன்னாடை அணிவித்து, உற்சாக வரவேற்பு அளித்தனர்.

டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏல உரிமையை ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி, திட்டத்தை ரத்து செய்ய உறுதியான நடவடிக்கை எடுத்தமைக்காக கிராம மக்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டனர்.

### மக்கள் மத்தியில் முதல்வர் உரை!

**அப்போது முதல்வர் அவர்கள் அக்கிராம மக்கள் மத்தியில் ஆற்றிய உரை வருமாறு :-**

நான் திடீரென்று வந்ததற்குக் காரணம் உங்கள் எல்லோருக்கும் தெரியும். நேற்றைக்கு அமைச்சர் மூர்த்தி தலைமையில், அரிட்டாப்பட்டி பகுதியைச் சுற்றியிருக்கக்கூடிய மக்கள், அந்தப் பகுதியில் உள்ள பெரியவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நேற்றைக்கு என்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்கள்.

டங்ஸ்டன் சுரங்கம் திட்டம் முழுமையாக ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று ஒன்றிய அரசால் அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டதற்கு எப்படிப்பட்ட அழுத்தத்தை இந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய மக்கள் தந்தார்கள் என்பதெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதை உணர்ந்து உங்களால் உருவாக்கப்பட்ட திராவிட மாடல் ஆட்சி, அதாவது உங்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருக்கக்கூடிய உங்களில் ஒருவனாக இருக்கக்கூடிய இந்த ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய’ ஆட்சியில், நாடாளுமன்றத்தில் நம்முடைய கூட்டணியில் உள்ள எம்.பி.க்கள் எல்லோரும் பேசி, அதற்குப் பிறகு சட்டமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றி அது இன்றைக்கு நாம் நினைத்தது போல வெற்றியடைந்திருக்கிறது. அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில், அது அ.தி.மு.க.வாக இருந்தாலும் சரி, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், இந்திய முஸ்லீம் லீக் போன்ற எல்லாக் கட்சிகளும் சட்டமன்றத்தில் ஒன்று சேர்ந்து அந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிக் கொடுத்தார்கள். அப்படி நிறைவேற்றிக் கொடுத்த நேரத்தில் நான் தெளிவாக சொன்னேன்.

“மக்களால் இன்றைக்கு ஆட்சியில் இருக்கக்கூடிய நான் இந்த முதலமைச்சர் பொறுப்பில் இருக்கின்றவரைக்கும் நிச்சயமாக டங்ஸ்டன் திட்டம் வராது. அதைப் பற்றி மக்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை” என்பதை நான் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னேன்.

### மக்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்!

அதுமட்டுமல்ல, அப்படி ஒருவேளை வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், நான் முதலமைச்சர் பதவியில் இருக்கமாட்டேன் என்று அதையும் சொன்னேன். ஆனால், அதற்காக நேற்றைக்கு என்னைச் சந்தித்த இந்தப் பகுதியில் உள்ள பெரியவர்கள் எல்லாம் பாராட்டு நிகழ்ச்சி நடத்தவேண்டும்.

உங்களுக்கு நன்றி சொல்லவேண்டும் என்று அழைத்தார்கள். உள்ளபடி எனக்கு பாராட்டுச் சொல்வதைவிட, நன்றி சொல்வதைவிட உங்களுக்குத்தான் நான் நன்றி சொல்லவேண்டும்; உங்களுக்குத்தான் பாராட்டுச் சொல்லவேண்டும்.

நான், நீங்கள் என்று பிரித்துப் பேச விரும்பவில்லை. நாம், நமக்கு - இதில் வெற்றி கிடைத்திருக்கிறது. அதுதான் உண்மை. ஆகவே, அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கக்கூடிய நாங்கள் என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்போம் என்பதை மீண்டும் ஒருமுறை இங்கே உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய அன்பான முகத்தைப் பார்க்கும்போது, உங்களுடைய எழுச்சியான முகத்தைப் பார்க்கும்போது, இங்கே சிரித்த முகத்தோடு, புன்முறுவலோடு உங்களைப் பார்க்கின்றபோது உங்களோடு நீண்ட நேரம் பேசவேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. ஆனால், மற்றொரு நிகழ்ச்சியும் இந்த வட்டாரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு நான் விமானத்தைப் பிடித்து சென்னைக்குச் செல்லவேண்டிய அவசியம் இருக்கிறது. நாளைக்கு வேறொரு மாவட்டத்திற்குச் செல்லவேண்டும். அதனால், நீண்ட நேரம் பேசமுடியாது. அதற்காக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் ஒருமுறை உங்களையெல்லாம் சந்திக்க வருவோம். இன்னும் ஒன்றரை வருடத்தில் தேர்தல் வரவிருக்கிறது. அதுவும் உங்களுக்குத் தெரியும். அந்தத் தேர்தலில் நீங்கள் எல்லாம் என்ன முடிவோடு இருக்கிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

### உங்கள் வீட்டுப் பிள்ளையின் ஆட்சி இது!

எது எப்படியிருந்தாலும், உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம். எங்களுக்காக நீங்கள் இருக்கிறீர்கள். ஆகவே, எதைப்பற்றியும் நீங்கள் கவலைப்படாதீர்கள். இது கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட ஆட்சி. அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட ஆட்சி. தந்தை பெரியார் அவர்கள் வழியில் நடைபெறக்கூடிய ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி. உங்கள் வீட்டுப் பிள்ளை; உங்களில் ஒருவனாக இருக்கக்கூடிய இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய ஆட்சி இது என்பதை மாத்திரம் மனதில் வைத்துக் கொண்டு, என்றென்றைக்கும் நீங்கள் ஆதரவு தாருங்கள். உங்களுக்குப் பக்கபலமாக என்றைக்கும் நாங்கள் இருப்போம், இருப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து, வல்லாளப்பட்டி கிராமத்திற்குச் சென்ற முதல்வர் அவர்களுக்கு அக்கிராம முக்கியப் பிரமுகர்கள் பொன்னாடை அணிவித்து, உற்சாக வரவேற்பு அளித்தனர்.

டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான திட்டத்தை ரத்து செய்ய உறுதியான நடவடிக்கை எடுத்தமைக்காக கிராம மக்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டனர்.

அரிட்டாபட்டி மற்றும் வல்லாளப்பட்டி கிராம மக்களிடம் முதலமைச்சர் அவர்கள் உரையாற்றியபோது, மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு திட்டத்தையும் ஒன்றிய அரசு செயல்படுத்த நினைத்தால் அதனை தமிழ்நாடு அரசு தடுத்து நிறுத்தி, மக்களின் நலனைக் காக்கும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி,

ஆ.வெங்கடேசன், எம்.பூமிநாதன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எம்.எஸ்.சங்கீதா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### ‘டங்ஸ்டன்’ திட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்திய

## பொதுமக்கள் மீதான அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன.28-

**“டங்ஸ்டன் திட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் உள்ள அரிட்டாப்பட்டி கிராமத்தை சுற்றியுள்ள பகுதிகளில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான உரிமையை ஒன்றிய அரசு வழங்கியதை எதிர்த்து அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தினர். தமிழ்நாடு அரசு பலமுறை எதிர்ப்பு தெரிவித்தும், ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்தை செயல்படுத்திட தமிழ்நாடு அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்று உறுதி அளித்து, இந்த திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று பிரதமரை வலியுறுத்தி முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்.

மேலும் இந்தத் திட்டத்தை ஒன்றிய அரசு கைவிட வேண்டும் என்று ஒருமனதாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 09.12.2024 அன்று ஒரு சிறப்பு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. மக்களின் உணர்வுக்கும் தமிழ்நாடு அரசின் உறுதிக்கும் கிடைத்த வெற்றியாக, இந்த திட்டத்தை ஒன்றிய அரசு கைவிட்டுள்ளது.

இந்த டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்ப பெறப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்தார்.

இதன்படி, இந்த போராட்டத்தில் ஈடுபட்ட 11,608 பொதுமக்கள் மீது மதுரை நகரம் தல்லாகுளம் மற்றும் மேலூர் காவல் நிலையங்களில் பாரதிய நியாய சந்கீதா சட்டம் 2023 ன் கீழ் 3 பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட 4 குற்ற வழக்குகளும் இன்று திரும்பப் பெறப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.